## 17

# விலகிச் சென்றுள்ள பரிசுத்தவான்களைக் கையாள்வது எவ்வாறு [5:19, 20]

பல ஆண்டுகளுக்கு முன்பு எனது மனைவி மாலியாவும் நானும், ஃபார்மிங்ட்டன் சபைக்குச் செய்யவேண்டிய முக்கியமான சில பணிகளைக் கொண்டிருந்தோம். செய்யத் தேவையானவற்றை நிறைவேற்ற, நாங்கள் சுதந்தரத்தைக் கொண்டிருக்க எங்களை அனுமதிப்பதற்கு, சபைக்குழுமத்தில் இருந்த பெண்களில் ஒருவரான டோரிஸ் லூயிஸ் என்பவர், சற்றுக்காலம் எங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்குத் தானே முன்வந்தார். எங்கள் குழந்தைகளை அழைத்து வருவதற்காக நாங்கள் லூயிஸின் இல்லத்திற்குச் சென்றபோது, அவர்களின் இல்லத்தை உடனடியாக நாங்கள் நேசிக்கலானோம். அவர்கள், 150 ஆண்டுகளுக்கும் மேல் பழையதான ஒரு வீட்டை வாங்கி இருந்தனர், அதை மீள்க்கட்டுவித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணியில் ஈடுபட்டிருந்தனர். அந்த வீட்டினூடே நடத்தல் மற்றும் அவர்கள் செய்து முடித்தி ருந்தவற்றைப் பார்த்தல் மற்றும் அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கவனித்துக் கேட்டல் ஆகியவற்றை நாங்கள் மகிழ்வுடன் அனுபவித்தோம். டோரிஸ் கூறியதை நாங்கள் கவனிக்கையில், புதுப்பித்தல் என்பது, உண்மையில் அன்பின் உழைப்பாக இருந்தது என்று எங்களால் கூற முடிந்தது. அது உழைப்பு மற்றும் அன்பு என்பவற்றின் முழுமையாக இருந்துள்ளது என்பது எனது யூகமாக இருக்கும். இதுவே மீளக்கட்டுவித்தல் திட்டத்தினுடைய எந்த வகையிலான பணியிலும் விஷயமாயிருப்பதாகக் காணப்படும்.

யாக்கோபு நிருபத்தின் மீதான நமது படிப்பை நாம் நிறைவு செய்கையில், அலைந்து திரிகிற ஒருவரை மீளக்கட்டுவித்தல் மீதான ஒரு குறிப்புடன், இந்த நிருபத்தை யாக்கோபு முடிக்கிறதை நாம் காண்கிறோம். யாக்கோபு, நமது அன்றாட வாழ்வில் விசுவாசம் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்த முடியும் என்பது பற்றிப் பேசியிருக்கிறார் (சோதனைகளைப் பற்றிய சத்தியம், நாவைப் பயன்படுத்துதல், தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்தல், நமது அயலாரை நேசித்தல் முதலியன பற்றி அறிவுறுத்தியிருக்கிறார்). அவர் தமது நிருபத்தின் முடிவில், தாம் ஒரு கல்விசார் ஆய்வை மாத்திரம் கொடுக்க வில்லை, ஆனால் செயல்படுவதற்கான அழைப்பையும் கொடுத்ததை அவர் நமக்குக் காண்பிக்கிறார். சுவிசேஷத்தின் சத்தியத்தில் இருந்து விலகிப்போய் இருப்பவர்கள் மற்றும் சபை கூடுதலின் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆகியோரை சரியான நடக்கைக்குத் திரும்பிக் கொண்டுவருதல் அவசியமாக உள்ளது.

கிறிஸ்தவர்கள் விலகிச் செல்லக்கூடும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ஒரு தனிநபர் கிறிஸ்தவராகிறார் என்பதால் சாத்தான் அவரை

விட்டுக்கொடுத்து விடுவான் என்று அர்த்தப்படுவதில்லை. ஏதேனும் இருந்தால் அவன் சாத்தான் அவரை அழிப்பதில் இன்னும் தீவிரமாகிறான் (1 பேதுரு 5:8). தங்கள் விசுவாசத்தைத் துறந்து சுவிசேஷத்தின் கிருபையில் இருந்து புறம்பே நடக்கிறவர்களுக்கு, ஒரு பயங்கரமான முடிவு காத்திருக்கிறது (2 பேதுரு 2:20, 21; எபிரெயர் 10:26, 27).

இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையின் மீது போதிய கவனம் செலுத்தப்படுவது இல்லை. நமது பிரசங்க மேடைகள் எச்சரிக்கைகளை எதிரொலிக்க வேண்டும் மற்றும் புதிய கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் அறிவுறுத்தப்பட்டு புத்திகூறப்பட வேண்டும். பலவீனமான, உலகப் பிரகாரமான அல்லது புறம்பே அலைகிற சகோதரர்களுக்காக ஊக்கமான ஜெபங்கள் ஏறெடுக்கப்படுவது மாத்திரம் அல்ல, ஆனால் விலகிச் சென்றுள்ள சகோதரர்களிடம் சென்று அவர்களை மீளத் திருப்புவதற்கான முயற்சிகள் ஒவ்வொன்றும் செய்யப்பட வேண்டும்.

லூரயிஸின் இல்லத்தை மீளக்கட்டுவித்தலில் உள்ள விஷயம் போலவே, ஒரு சகோதரரை மீளக்கட்டுவித்தல் என்பது அன்பின் உழைப்பாக இருக்கும். அது அதிகமான உழைப்பு *மற்றும்* அன்பு ஆகியவற்றையும் எடுத்துக் கொள்ளும். நாம், யாக்கோபு நிருபத்தின் கடைசி இரண்டு வசனங்களைக் கண்ணோக்கி, விலகிப்போன பரித்தவான்களுக்கு நாம் செய்ய வேண்டியதாக அவர் கூறுகிறது என்ன என்று கண்ணோக்குவோமாக.

## சாத்தியக்கூறு: “உங்களில் ஒருவன் ...” (5:19)

சத்தியம் என்பது வாழும் விஷயமாக உள்ளது. அது நமது சிந்தைகளைப் பிடிக்கும் போது, அது நமது வாழ்வை மாற்றுகிறது. சத்தியத்தைப் பற்றிய நமது அறிவானது, உண்மைகளை வெறுமனே மனப்பாடமாகக் கூறுதலைக் காட்டிலும் அதிகமானதாக இருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறியிருக்கிறார்; அது நாம் வாழும் வகையினால் ஆதாரப்படுத்தப் படவேண்டும். உதாரணமாக, நீங்கள் விசுவாசம் கொண்டிருந்தால், சோதனை வேளையில் நீங்கள் சந்தேகப்பட மாட்டீர்கள், தேவைகள் கொண்டிருப்பவர்களை நீங்கள் பராமரிப்பீர்கள், உபத்திரவத்தின் வேளைகளின்போது நீங்கள் பொறுமையாக இருப்பீர்கள். “அலைந்து திரிகிற” அல்லது “புறம்பே திரிகிற” பரிசுத்தவான்களின் வாழ்வானது அவர்கள் விசுவாசிப்பதாகக் கூறும் விஷயத்துடன் இசைவாயிராததால் அவர்களை நீங்கள் அடையாளம் காண்பீர்கள். தேவனிடத்தில் இருந்து புறம்பே செல்லுகிற கிறிஸ்தவரின் இயல்பை, “விலகி” என்ற ஆர்வமுள்ள ஒரு வார்த்தையைக் கொண்டு யாக்கோபு விவரித்தார். அந்த வார்த்தை, “தவறுக்குள் விழுதல்” அல்லது “புறம்பே செல்லுதல்” என்று அர்த்தப்படுகிறது. ஒரு ஆடு தனது மேய்ப்பன் மற்றும் மந்தையில் இருந்து விலகிச் செல்வதை விவரிக்க, இந்த வார்த்தையை மத்தேயு பயன்படுத்துகிறார் (மத்தேயு 18:12). ஒரு கிறிஸ்தவர், தேவன் நியமித்துள்ள விசுவாசத்தின் வழியை மேற்கொள்வதற்கு மாறாகத் தமது சொந்த வழியை மேற்கொள்ளுதல் என்பதே இங்கு யாக்கோபு சித்தரிக்கும் விஷயமாக உள்ளது.

தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் விலகிச் செல்லுதலின் சாத்தியக் கூற்றை நிரூபிக்க, வேதவாக்கியங்களின் படிப்பில் ஒருவர் வெகுதூரம் செல்லத் தேவையிராது. மாபெரும் விசுவாசத்தின் மனிதரான ஆபிரகாம், எகிப்தியரிடம்,

சாராள் தனது சகோதரி என்று பொய்கூறியபோது, அவர் தமது உறுதிப்பாட்டில் இருந்து விலகிச் சென்றிருந்தார் (ஆதியாகமம் 12:9). தேவனுடைய இருதயத் திற்கு ஏற்ற மனிதரான தாவீது, ஒரு பெண்ணுக்காக ஒருவனுக்கு ஒருத்தி என்ற தேவனுடைய உயர்ந்த கொள்கைகளில் இருந்து விலகிச் சென்று, இன்னொரு மனிதரின் மனைவியுடன் விபசாரம் செய்தார் (2 சாமுவேல் 11:2-5). கர்த்தருக்கு மிகவும் நெருக்கமான சீஷர்களில் ஒருவரான பேதுரு, இடர்ப்பாடான ஒரு தருணத்தில் கர்த்தரை மறுதலித்தார் (மத்தேயு 26:69-74).

## பொறுப்பு: "பாவியைத் திருப்புகிறவன்" (5:20)

நம்மில் பலர், கிறிஸ்தவம் என்பது, பிசாசுக்கு எதிரான நமது போராட்டத்தில் நமக்கு ஒருவர் மற்றவர் (உதவி) தேவையில்லை என்பது போல், "தனிமை யாகத் திரிபவர்" என்ற வகையிலான விஷயம் என்பதாக நினைப்பதாகக் காணப்படுகிறது. இது உண்மையல்ல. நமக்கு ஒருவருக்கொருவர் தேவை! நான் என்று அல்ல. நீங்கள் என்று அல்ல. அது *நாம்* என்று இருக்கிறது! நாம் ஒவ்வொருவரும் மற்றவருக்கு ஆவிக்குரிய வகையில் பொறுப்பைக் கொண்டுள்ளோம், மற்றும் இவ்வசனமும் பிற வசனங்களும் (கலாத்தியர் 6:1; எபிரெயர் 10:24) இந்தப் பொறுப்பைச் சுட்டிக்காண்பிக்கின்றன.

நமது கிறிஸ்தவத்தைத் தவிர, ஏறக்குறைய மற்ற எல்லாவற்றைக் குறித்தும் நாம் ஒருவர் மற்றவருடன் பேசுவதில் சௌகரியமாக உணருகிறோம். கால்பந்து, வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கார்கள் மற்றும் மாடுகள் ஆகியவற்றைப் பற்றி நம்மால் பேச முடியும், ஆனால் உண்மையிலேயே முக்கியமான விஷயங்கள் பற்றி ஒருவர் மற்றவருடன் பேசுவதில் நாம் தைரியக் குறைவுபடுகிறோம். இது ஏன் உண்மையாக உள்ளது என்பதற்கு இரு காரணங்கள் நிலவுகின்றன. முதலாவது, வேறு யாரேனும் ஒருவருடன் அவரது ஆவிக்குரிய விஷயங்கள் பற்றிப் பேசுவதில் சௌகரியமாக உணராத அளவுக்கு, நாம் நமது சொந்தக் கிறிஸ்தவத்துடன் போராடிக் கொண்டு இருக்கலாம். அல்லது, நாம் அவரைவிட மிகச்சிறந்தவராக இருக்கிறோம் என்று அவர் நினைத்து விடுவாரோ என்று நாம் பயந்திருக்கலாம். அனேகமாக, பெரும்பான்மையான வேளைகளில், இது நமது பணியல்ல என்பது போல் மாத்திரம் நாம் உணருகிறோம். இதன் விளைவாக, சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் "சத்தியத்தைவிட்டு விலகிப்" போகின்றனர், மற்றும் நாம், அவர்களின் ஆவிக்குரிய வாழ்வு மற்றும் நிலை ஆகியவற்றைப் பற்றி அவர்களிடத்தில் ஒருக்காலும் பேசுவதில்லை.

நாம் அவரை, அவரது வழியின் தவறில் இருந்து "திரும்பக் கொண்டுவரும் மற்றும் அவரைத் திருப்பும்" பொறுப்பைக் கொண்டுள்ளோம். விலகிப்போயிருக்கிறவரை சூழ்ச்சியாலோ அல்லது "இழுத்து" வருதலினாலோ திருப்பிக்கொண்டு வர முடியாது என்பதால் அது சிரமமாக உள்ளது. ஒரு நபர் செய்வதற்குத் தேர்ந்துகொள்ளாத ஒரு செயலைச் செய்வதற்கு, அந்த நபரைத் தேவன்கூட வற்புறுத்த மாட்டார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்தப் பணியை எவ்வாறு செய்வது என்பது பற்றி முழுமையும் யாக்கோபு கூறுவதில்லை, ஆனால் இதை நாம் செய்யவேண்டும் என்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். இதற்கான அறிவுறுத்துதலின் மிகப்பலமான வார்த்தைகள் பவுலிடமிருந்து வருகின்றன; "நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" (கலாத்தியர் 6:1).

இது முட்டாள்தனமாக அவசரப்படும் நேரம் அல்ல. இது கோபம் அல்லது பொறுமையற்ற ஆவியைக் கொண்டிருக்கும் நேரமல்ல. “விலகி” இருப்பவர் அடங்காதவராக அல்லது கலகம் செய்பவராகக் காணப்படலாம், ஆனால் அவர் அனேகமாக, உள்ளாகக் காயப்பட்டு அல்லது முறிந்து இருக்கலாம்.

இயேசு மக்களிடம் நடந்து கொண்டது போல, நாம் மக்களிடம் நடந்துகொள்ள வேண்டியதான வேளை என்று ஒன்று இருக்குமென்றால், அது இந்த வேளைதான். நமக்கு சுவிசேஷம் தேவைப்படுகிறது, மற்றும் நாம், பவுல் பேதுருவிடம் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதைக் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது: அன்புடன், மென்மையாக, மற்றும் அறைகூவல் விடுக்கும் வகையில். விலகிப் போயிருப்பவருக்கு நாம் அவ்வாறே பதில்செயல் செய்ய வேண்டும்: இயேசுவின் அன்புடன், அன்பாக, மென்மையாக மற்றும் அறைகூவல் விடுக்கும் வகையில். அடிக்கடி நாம், கடுமையாகவும் நியாயந்தீர்க்கும் வகையிலும் நடந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம், ஆனால் அது இயேசுவின் ஆவியாக இருப்பதில்லை.

## உள்ளாற்றல் “... ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும்” (5:20)

விலகிப் போயிருக்கும் ஒருவரின் ஆத்துமா, மரணத்தில் இருந்து இரட்சிக்கப்படும். புதிய ஏற்பாட்டில் “மரணம்” என்பது, வாழ்விற்கு பாவம் என்ன செய்கிறது என்பதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாவமானது கர்த்தருடனான ஐக்கியத்தைத் துண்டிக்கிறது. தேவனுடைய பிள்ளையாக இருந்துகொண்டு தவறு செய்கிறவர், மரண தண்டனையின் கீழ் தமது பாவத்தில் நிலைத்திருக்கிறார் (ரோமர் 6:23; எபிரெயர் 10:26, 27). அந்த நபர், மீளக் கட்டப்படுவதற்கு, தேவனிடம் இருந்து தூர இருத்தலில் இருந்து காக்கப்பட வேண்டும்.

விலகிப் போயிருக்கும் கிறிஸ்தவர் பயம் கொள்ளத் தேவையில்லை: அவரைத் தேவன் தமது ஐக்கியத்திற்குள் திரும்பவும் வரவேற்பார் மற்றும் அவரது பாவங்களை மன்னிப்பார். அந்த மன்னிப்பின் விளைவானது இரண்டு ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது. முதலாவது, திரளான பாவங்கள் மூடப்படும். இரண்டாவது, மனந்திரும்புதலுக்கு திரும்பும் இந்த நிகழ்வு (அல்லது விலகிச் சென்றுள்ளவர் திரும்பவும் கொண்டுவரப்படுதல் என்ற நிகழ்வு), இரட்சிப்பு அல்லது மன்னிப்பை ஏற்படுத்தும் மற்றும் திருப்புதலைச் செய்ய முயற்சி செய்கிறவருக்கு ஒரு வெகுமதி தரப்படும் (எசேக்கியேல் 33:9ஐக் காண்க).

## முடிவுரை

டான் மற்றும் டோரி லூயிஸ் ஆகியோரின் இல்லத்திற்கும் 150 ஆண்டுகளாக எவ்விதப் பராமரிப்பும் இல்லாது கிடந்த பழைய வீட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன? ஏராளமான வேலை மற்றும் ஏராளமான அன்பு என்பதே வேறுபாடாகும். அந்த வீடு, ஒரு மாறுதலை அனுபவித்துள்ளது.

சத்தியத்தை விட்டு விலகி, மறுபடியும் அதில் வராது விலகித்திரியும் கிறிஸ்தவருக்கும் யாரேனும் ஒருவரால் திரும்பக் கொண்டுவரப்பட்ட

கிறிஸ்தவருக்கும் இடையில் அதுவே வேறுபாடாக உள்ளது. யாரோ ஒருவர் ஒரு ஆத்துமாவுக்காக அக்கறை எடுத்துக் கொண்டதால், ஒரு மாற்றம் நடந்திருக்கிறது.